

நெல்லை மாவட்டம் வள்ளியூர் பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டு வரும் சந்தை பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வகாப், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.

மதுரை -தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை மேலக்கரந்தை கிராமத்தில் நிகழ்ந்த

# சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 26 -

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், மதுரைதூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை, மேலக்கரந்தை கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு - ஆறுதல் மற்றும் நிதியுதவியினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை, மேலக்கரந்தை கிராமம், பொன்வேல் பெட்ரோல்பங்க் எதிரில் இன்று (25.12.2024) அதிகாலை திருப்பூரிலிருந்து திருச்செந்தூருக்கு TN38 BH 5794 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்றின் ஓட்டுநர் காரை சாலையின் ஓரமாக நிறுத்திவிட்டு தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக பின்புறத்திலிருந்து வந்த கண்டெய்னர் லாரி மோதிய விபத்தில் காரில் பயணம் செய்த 5 நபர்களில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், அலங்கியம் கிரா மத்தைச் சேர்ந்த விஜயகுமார் (வயது 38) த/பெ.பழனிச்சாமி, செல்வராஜ் (வயது 38) த/பெ.ஆறுமுகம் மற்றும் விக்னேஷ் (வயது 31) த/பெ.காளிமுத்து ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ராஜ்குமார் (வயது 35) மற்றும் மகேஷ் குமார் (வயது 33) ஆகிய இருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் - செ.ராபர்ட் புரூஷ் - அப்துல் வகாப் முன்னிலை!

# இராதாபுரம் வட்டம் - வள்ளியூர் சந்தை -பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு செய்தனர்!

நெல்லை, டிச. 26 -

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் வள்ளியூர் சந்தை மற்றும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.

வள்ளியூர் பேருந்து நிலையம் அருகில் ரூபாய் 5.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 222 கடைகளுடன் புதிய சந்தை மேம்படுத்தும் பணிகளையும், கூட்டப்புளி கிராமத்தில் ரூபாய் 48 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கப்பட உள்ள பணிகளையும்,பெருமணல் கடற்கரை பகுதியில் தூண்டில் வளைவு அமைப்பதற்காக திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தூண்டில் வளைவு அமைக்கப்பட்டுள்ள பகுதியையும் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் ஆகியோர் பார்வையிட்டனர்.

மேலும் இடிந்தகரை மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு விரிவுபடுத்துவதற்காக திட்ட மதீப்பீடு தயார் செய்யப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ள பகுதியை பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு ஆகியோர் படகில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து இடிந்த கரை மீனவ கிராமத்தைச் சேர்ந்த 28 மீனவர்கள் ஈரான் நாட்டில் மீன்பிடித் தொழில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பக்ரைன் நாட்டு கடலோர காவல் படையினரால் கடந்த செப்டம்பர் 11 ம் தேதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.சிறையில் அடைக்கப்பட்ட28மீனவர்களுக்கு பக்ரைன் அரசு 6 மாதம் சிறை தண்டனை வித்தது. இதை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியுறவுதுறை அமைச்சருக்கு மீனவர்களை விடுதலை செய்யுமாறு நடவடிக்கை எடுக்க கடிதம் அனுப்பினார்கள்.

தமிழ்நாடு அரசின் பல்வேறு நடவடிக்கையால் மீனவர்களின் சிறை தண்டனை 6 மாதத்தில் இருந்து 3 மாதமாக குறைக்கப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்ட 28 மீனவர்களும் சிறைத்தண்டனை முடிந்து பக்ரைன் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு கடந்த 18 ஆம் தேதி விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்தனர்.அவர்களை பேரவை தலைவர் மு.அப்பாவு, ராபர்ட் புரூஸ் எம்.பி.ஆகியோர் வரவேற்று சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர். தமிழ்நாடு அரசின் பெரும் முயற்சியால் 28 மீனவர்களும் சொந்த ஊரான இடிந்த கரை வந்தடைந்தனர்.

இந்நிலையில் பக்ரைன் நாட்டிலிருந்து தாயகம் திரும்பி 28 மீன்வர்களை இடிந்தகரையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு ஆகியோர் நேரில் சந்தித்து நிவாரண உதவிகளை வழங்கினார்.

நிகழ்வில் மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குனர் சந்திரா, உதவி இயக்குநர் ராஜதுரை,பேரூராட்சி கள் உதவி இயக்குனர் வில்லியம் ஜேசுதாஸ்,இராதாபுரம் தாசில்தார் கிருஷ்ண குமார்,வள்ளியூர் பேரூராட்சி தலைவர் ராதா, செயல் அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள்,கழகத்தினர் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி

# தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாமன்றக் கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு!

சென்னை, டிச. 26 -

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து ஆளுங்கட்சி மன்ற கொறடா எ. நாகராஜன்வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம், நாளை ( 27.12.2024 - வெள்ளிக்கிழமை ) காலை 11.00 மணியளவில் ரிப்பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனை கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியா மற்றும் துணை மேயர் மு.மகேஷ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற வுள்ளார்கள்.

எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினா¦கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: 30.12.2024 அன்று நடைபெறும் மாமன்ற கூட்டம் தொடா¦பாக.

இவ்வாறு எ.நாகராஜன் அறிவித்துள்ளார்.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஏனாதி கோட்டை ஊராட்சி ஏனாதிகோட்டை கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பேருந்து போக்குவரத்து சேவையை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து ஏனாதி கோட்டையில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்தையும் திறந்து வைத்தார் . உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உ.திசைவீரன், பரமக்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர், அன்பு கண்ணன், போக்குவரத்து துறை கிளை மேலாளர் ரத்தினம், தொ.மு.ச. தலைவர் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஊராட்சி மன்ற தலைவர், கிராம நிர்வாக அலுவலர் சத்தியசீலன் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை 138–வது வட்ட தி.மு.க. செயலாளர் மு.அன்பழகன் நேற்று முன்தினம் மாலை மறைவெய்தினார் என்ற தகவலறிந்து தி.மு.க. வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், கலைஞர் நகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் உள்ளிட்ட பலர் உடனுள்ளனர்.

என்.மாலைராஜா ஏற்பாட்டில் - துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

# நெல்லை மாநகராட்சி வர்த்தக மையத்தில் 4800 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்! டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில்!

நெல்லை, டிச. 26 -

இளைஞர்களின் எழுச்சி நாயகர், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என்.மாலைராஜா ஏற்பாட்டில் நெல்லை மாநகராட்சி வர்த்தக மையத்தில் (23 .12.2024 - திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் 4800 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.முன்னதாக அமைச்சர் கே.என்.நேரு சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்று சர்வ சமய பிரதி நிதிகளுடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடினார்.

கழக வர்த்தக அணி சார்பில் இளைஞர்களின் எழுச்சி நாயகர், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு 23 .12.2024 - திங்கட்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் நெல்லை மாநகராட்சி வர்த்தக மையத்தில் 4800 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில்

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ. எல்.எஸ். லெட்சுமணன் மு.பேச்சி பாண்டியன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி, மாவட்ட அவைத் தலைவர் முருகன்,துணை செயலாளர்கள் தர்மன்,சுரேஷ்,கிரிஜா குமார், மத்திய மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர், மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் முத்துராமலிங்கம், மத்திய மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் காமினி தேவன்,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டை யப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன்,மாவட்ட முன்னாள் பொருளாளர் அருண்குமார், மத்திய மாவட்ட பிரதிநிதி என். எம்.ஆர். இசக்கிபாண்டியன், 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் டாக்டர்.சங்கர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலைராஜா தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.நிகழ்ச்சியை மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று 1800 நபர்களுக்கு கிரைண்டர்,1800 நபர்களுக்கு ஹாட் பாக்ஸ், 600 நபர்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள்,600 நபர்களுக்கு வேட்டி,சேலை ஆக மொத்தம் 4800 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது.

40 ஆண்டுகாலம் கழக ஆட்சியில் ஒவ்வொரு பகுதிக்கும் ஓடோடி சென்று கழகத்தையும்,இளைஞர் அணியையும் வளர்த்து நாடும் போற்றும் சிறந்த முதலமைச்சராக திராவிட மாடல் ஆட்சி தந்து கொண்டிருக்கும் மு.க. ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தது போல். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். நான்கு ஆண்டு காலம் இளைஞர் அணி செயலாளராக இருந்து நாடாளுமன்றத் தேர்தல்,இடைத்தேர்தல் போன்றவை களில் சுழன்று,சுழன்று பணியாற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினருக்கான வெற்றியை பெற்றுக் கொடுத்தார்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் சொன்னது போல் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 50 ஆண்டுகாலம் கழகம் மக்கள் பணியாற்றும்.அதற்கு உறுதுணையாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இருப்பார்.கழகத்தின் 25 வது ஆண்டு வெள்ளி விழா,50 வது ஆண்டு பொன்விழா,75 வது ஆண்டு பவள விழா ஆகியவை கொண்டாடப்பட்ட போதெல்லாம் கழகம் தான் ஆட்சியில் இருந்தது.நூற்றாண்டு விழாவை கொண்டாடும் போதும் கழகம் தான் ஆட்சியில் இருக்கும்.அதற்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மிகப்பெரிய பங்கு வகிப்பார்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சா. ஞானதிரவியம்,நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச்செல்வி,பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,

பகுதி கழக செயலாளர் துபாய் சாகுல்(மேலப்பாளையம்)ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, மாரியப்பன்,அன்பழகன்,முன்னாள் மேயர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் நடராஜன்,ராஜேஸ்வரி, பேரூர் செயலாளர்கள் செல்வபாபு பேச்சிகுட்டி, அணி அமைப்பாளர்கள் பொன்னையாபாண்டியன்,கருப்பசாமி என்ற செல்வம்,நவ்ஷாத்,துரைசக்திகீதா, அனிதா,ராஜகுமாரி,நவநீதன்,பலராமன், மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், வசந்தா, கோகுலவாணி, சங்கர், கீதா, சகாய ஜூலியட் மேரி, தலைமை கழக பேச்சாளர்கள் நெல்லை ரவி, முத்தையா, கவிஞர் மூர்த்தி உள்பட மாநகர கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அணி அமைப்பாளர்கள், பேரூராட்சி தலைவர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள்,கழக முன்னோடிகள்,மத்திய மாவட்ட, மாநகர கழக அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழா ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஹரி பாலகிருஷ்ணன், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பல்க்குமார்,நெசவாளர் அணி அமைப்பாளர் அசரிய ஸ்டீபன்,தொண்டரணி அமைப்பாளர் தொப்பி மைதீன், வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் கந்தசாமி,அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாரியப்பன்,மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பெரிய துரை,மாவட்ட பிரதிநிதி கார்டன் சேகர்,தகவல் தொழில்நுட்ப அணி பிரபா அருள்மணி,தொண்டரணி யமஹா முருகன், கோபி,மாநகர விவசாய அணி முருகன்,முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் பால்ராஜ், கருங்குளம் கண்ணையா,தகவல் தொழில் நுட்ப அணி தங்கராஜ், அமைப்புசாரா ஓட்டுநர் பேச்சிமுத்து, ராஜகனி,சூப்பர் மணி,பேராசிரியர் தங்கப்பாண்டி,டவுண் முருகன், குருநாதன், அழகு கீர்த்தி, கங்கை வேல்ராஜ், ஜலீல் ரகுமான்,வேல் பாண்டி, ஷாஜகான், பேட்டை ராஜகனி, மகேஷ், மாசானம்,கணேசன்,குட்டி ஆகியோரும்.

நிகழ்ச்சி நிறைவில் மத்திய மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் கணேஷ் ராஜா,மத்திய மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் சேக்தாவுது,தென்காசி தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார்,வட்ட செயலாளர் முத்துராமன் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என்.மாலைராஜா செய்திருந்தார்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் அரூரை அடுத்த சித்தேரி மலைப்பகுதியில் தீவிர மழை காரணமாக மண் சரிவு ஏற்பட்டு மலைக்கிராமத்திற்கான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் சித்தேரி மலை பகுதிக்கு உட்பட்ட 63 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எந்த கனரக வாகனங்களையும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இது குறித்து தகவல் அறிந்த தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் சீரமைக்கும் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு சீரமைக்கப்பட்ட பாதையில், மீண்டும் போக்குவரத்தினை தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மற்றும் முன்னாள் அமைச்சர், கழக மேற்கு மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் ஆகியோர் துவக்கி வைத்தனர். நிகழ்வின் போது மாவட்ட துணை செயலாளர் பொறியாளர். சி.கிருஷ்ணகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், சந்திரமோகன், நெடுஞ்சாலைதுறை நாகராஜ், வனத்துறையினர் உடனிருந்தனர்.